# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 009/மா/2017

ஆணை எண். 84/2017

நாள் : 03/05/2017

08.01.2017 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி – தாமாக முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

மாநகராட்சி ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

"கழிவறை கட்டாமலே......ஆய்வு அதிகாரிகளுக்கு அதிர்ச்சி தந்தது திருச்சி மாநகராட்சி" என்று தலைப்பிட்டு 08.01.2017 நாளிட்ட தினமலர் நாளிதழிலும், "கட்டாத கழிவறைகளுக்கு கையில காசு......கட்டி முடித்தவர்களுக்கு இழுத்தடிப்பு" என்று 10.01.2017 நாளிட்ட தினமலர் நாளிதழிலும் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. மேற்குறிப்பிட்ட செய்திகளை, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7–ன் கீழ் முறையீடாக எடுத்துக் கொள்ளப்பட்டு, 09/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட செய்திகள் குறித்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் தனிநபர் கழிப்பறைகள் கட்டப்பட்டு வருவதில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து 08.01.2017 மற்றும் 10.01.2017 நாளிட்ட தினமலர் நாளிதழில் கீழ்க்காணும் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன:–

(i) திருச்சி, பீமநகர், கீழத் தெருவில் 05.01.2017 அன்று மத்திய அரசு குழுவினர் ஆய்வு மேற்கொண்டபோது கழிவறைகள் கட்டாமலேயே கட்டியதாகத் தெரிவித்தது ;

(ii) அரைகுறையாக கட்டப்பட்ட கழிவறைகளுக்கு உரிய பணத்தை (Bill) அதிகாரிகள் பெற்றது ;

(iii) பீமநகர், கீழ்த்தெருவில் திரு செல்வராஜ் என்பவருக்கு பகுதி மானியம் நேரிடையாகவும், பகுதி மானியம் வங்கி மூலம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தது ; நாளிதழில் செய்தி வெளியானபின் வங்கியில் செலுத்தியதாகத் தெரிவித்தத் தொகை ரூ. 3,500/– ஐ நேரில் வழங்கியது ;

(iv) ஆட்டோ ஓட்டுநர் திரு இராஜேந்திரன் அவர்களுக்கு கையில் பணம் வழங்கியது ;

(v) பயனாளிகளுக்கு பணம் வங்கி மூலம் செலுத்தாமல், முறைகேடுகள் ஏற்படுவதற்கு ஏதுவாக கையிலேயே வழங்கியது ;

(vi) மாநகராட்சியில் 40 வார்டுகளில் வீடுகள் நெருக்கமாக உள்ள நிலையில் கழிப்பறை கட்ட இடம் இல்லாத நிலையே உள்ளது. இந்நிலையில் மாநகராட்சியில் 1900 கழிவறைகள் கட்டப்பட்டனவா என்ற ஐயம் ;

(vii) வார்டு ஒன்றுக்கு 5 முதல் 7 வரை கழிப்பறைகள் கட்டப்படாமலேயே கணக்கு கட்டப்பட்டதாக செய்தி ;

(viii) இந்நேர்வு குறித்து பொருள் சம்பந்தமாக பொன்மலை இளநிலை பொறியாளர் ரகுராமன் சுப்பிரமணியா புரத்திற்கு மாறுதல் செய்து உத்தரவிட்டது ;

2. மேற்குறிப்பிடப்பட்ட முறையீடுகள் குறித்து, திருச்சி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. " தூய்மை இந்தியா " திட்டத்தின் கீழ், 1900 எண்ணிக்கையிலான தனிநபர் கழிப்பிடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது என்றும் அவற்றில் 2015–16 மற்றும் 2016–17–ஆம் வருடங்களில் முறையே 760 மற்றும் 1140 கழிப்பிடங்கள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். 1900 கழிப்பிடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும், 1349 கழிப்பிடங்கள் பயனாளிகளுக்கு அவரவர் வங்கிக் கணக்கிலும், மீதமுள்ள 551 கழிப்பிடங்கள் மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் கட்டிமுடிக்கப்பட்டு, ஒப்பந்ததாரர்களின் வங்கி கணக்கில் தொகை செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தின் கீழ் ரூ.12,000/– மதிப்பில் கட்டப்படும் கழிப்பறைகளுக்கு பயனாளிகளுக்கு மானியமாக ரூ.4,000/– மத்திய அரசால் வழங்கப்பட்டு வருகிறது என்றும் மாநில அரசும், மாநகராட்சியும் தலா ரூ.2,000/– மானியம் வழங்குகின்றன என்றும் மீதித்தொகை ரூ.4,000/– பயனாளிகள் தன் பங்காக செலுத்தவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

3. தனிநபர் கழிப்பிடத்திற்கான செலவில் மூன்றில் ஒருபங்குத் தொகையை (ரூ.4,000/–) மத்திய அரசே ஏற்கிறது. எனவே, மேற்படித்தொகையை மத்திய அரசு வழங்குமுன் உரிய தணிக்கைகள் மேற்கொண்டபின்பே வழங்கப்படும். நாளிதழ்களில் வெளியான செய்தியினைத் தொடர்ந்து மாநகராட்சி ஆணையரும் உரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். எனவே, நாளிதழ்களில் தெரிவிக்கப் பட்டுள்ள செய்திகளில் உண்மைத் தன்மை இருப்பதைக் கண்டறிந்தால் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என திருச்சி மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், " தூய்மை இந்தியா " திட்டத்தை செயல்படுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு மாநகராட்சிகளை தரவரிசை படுத்தும் முறையினை மத்திய அரசு பின்பற்றி வருகிறது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே 2–வது மற்றும் 3–வது தரவரிசையைப் பெற்று பெருமை சேர்த்துள்ளது. தமிழ்நாட்டின் மையப்பகுதியில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாநகராட்சி " தூய்மை இந்தியா " திட்டத்தை செயல்படுத்துவதில் மற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்வதுடன், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தரவரிசையின் முதல் இடத்தைப் பெறுவதற்கு அலுவலர்கள் முனைப்புடன் செயல்படவேண்டும் என வலியுறுத்தி, அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017–ஆம் ஆண்டு மே திங்கள், 3–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

4/5/17
செயலாளர்.

பெறுநர்

மாநகராட்சி ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சி.

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்